1982 பிப்ரவரி 10]

மாவட்டங்களைப் பிரித்தமைப்பது குறித்த வர்கீஸ் கமிட்டியின் பரிந்துரைகள்.

*வினா எண். 123— **திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டங்களைப் பிரிப்பது சம்பந்தமாக வர்கீஸ் கமிட்டியின் பரிந்துரை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, பெரிய மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக பிரிக்க வேண்டுமென்று டி. ஏ. வர்கீஸ் கமிட்டி சொல்லியிருக்கிறது. அப்படி பிரிக்கிறபோது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தொடரும் செலவு 37 இலட்சம் ரூபாயும் தொடராச் செலவு 367 இலட்சம் ரூபாயும் ஆகிறது. இதைக் கணக்கில் கொண்டு, நிதி வசதிக்கு ஏற்பத்தான் அவருடைய பரிந்துரையை செயல்படுத்த முடியும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, 1973 ஆம் ஆண்டு அரசுக்கு சமர்ப்பித்த வர்கீஸ் கமிட்டி தன்னுடைய பரிந்துரையில் குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகளில் ஆறு மாவட்டங்களையாவது உருவாக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். எப்போது அந்த மாவட்டங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்? மதுரை மாவட்டத்தின் வடக்குப் பகுதியையும், திருச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியையும் இணைத்து திண்டுக்கல்லை தனி மாவட்டமாக அமைக்க வேண்டும் என்று அரசுக்கு அந்தக் குழு அறிவித்திருக்கிறதா? அதை விரைவில் செயல்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அந்தக் கமிட்டி சொல்லியிருக்கிறது. அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தக் கமிட்டி மேலிடத்திலே செய்ய வேண்டிய சீர் திருத்தங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறதே தவிர, கீழ் இடங்களிலே என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் வருவாய் சரகம் (ரெவின்யூ பிர்க்கா) தான் வருவாய்த் துறையில் அடிமட்டத்தில் இருக்கிற அலுவலகம். அதைப் பிரிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. ஆனால், இந்த அரசு 774 வருவாய் சரகங்களை இன்றைக்கு 1,097 ஆக உயர்த்தி, இதுவரை 200-க்கு மேற்பட்ட வருவாய் சரக அலுவலகங்களுக்கு உடனடியாக அலுவலகக் கட்டிடங்களும் கட்டிக்கொடுத்து, வருவாய்த்துறையில் சீர்திருத்தம் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 10

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாவட்டங்களைப் பிரிப்பதிலே ஏற்படுகின்ற செலவைப்பற்றிச் சொன்னார்கள். இந்த அரசு ஏற்பட்ட பிறகு மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்திக் கொடுத்த பிறகு, திண்டுகல்லை தலைமையிடமாகக் கொண்டு, அது ஒரு தனி மாவட்டம் ஆகும் அந்தஸ்த்தைப் பெறும் நிலையில் இருக்கிறது. ஆகவே, அதைத் தனியாகப் பிரிப்பதனால் செலவும் குறைவாகத்தான் ஆகும். எனவே, மாவட்டங்களைப் பிரிக்கின்றபோது திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க முன்னுரிமை அளிக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து எது பிரிக்கப்படும் என்பதை நான் சொல்ல முடியாது. அது பற்றி அமைச்சரவைதான் முடிவு செய்ய வேண்டும், முதலமைச்சர்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், மதுரை மாவட்டத்தைப் பிரிப்பது முன்னுரிமையிலே வரும் என்பதை மட்டும் என்னாலே இப்போது சொல்ல முடியும்,

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அட்மினிஸ்ட்ரேட்டிவ்லி பிரிக்கப்பட்ட சில மாவட்டங்கள் இருக்கின்றன. நிதித் துறையிலும், கல்வித்துறையிலேயும், போலீஸ் துறையிலும் அவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டம் கூட மேற்குத் தஞ்சை, கிழக்குத் தஞ்சை என்று ஏற்கெனவே அட்மினிஸ்ட்ரேட்டிவாக பிரிக்கப்பட்டுவிட்டது. அதற்குரிய கணக்குகளைத் தனித்தனியாகப் போட வேண்டியதுதான் பாக்கி. ஆகவே அப்படிப்பட்ட விஷயங்களில் கலெக்டரை நியமித்து அங்கெல்லாம் ரெகுலரைஸ் பண்ண வேண்டியதுதானே, ஏன் அப்படிச் செய்யவில்லை என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, கலெக்டர் மட்டும் போட்டால் போதும் என்ற நிலைமை இல்லை. மற்ற நிர்வாகச் செலவுகளும் இருக்கின்றன என்பதை நான் முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டால் என்னைப் பொறுத்த வரையில் நிர்வாகத்திலே கீழே இருக்கின்றவர்களை முதலிலே பிரிக்கவேண்டும் என்றுதான் கருதுகிறேன். நமது முதலமைச்சர் பதவிக்கு வந்ததற்குப் பிறகு வட்டங்களையும், வருவாய் கோட்டங்களையும், பிர்க்காக்களையும் பிரித்துக் கொண்டு வருகிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய மாவட்டங்களை எல்லாம் பிரிக்க வேண்டுமென்றால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ் நாட்டிலே 39 எம். பி, க்கள் இருக்கிறார்கள். உத்தரப்பிரதேசத்திலே இது போன்று இரண்டு மடங்கு எம்,பி. க்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு முதலமைச்சரே போதும் என்றுதான் வைத்துக்

1982 பிப்ரவரி 10]

கொண்டிருக்கிறார்கள். அந்த மாநிலத்தை இரண்டாகப் பிரிக்க வில்லை. ஆகவே கலெக்டர் ஒருவராக இருந்தாலும் கூட அவருக்குக் கீழே பல நிர்வாக அதிகாரிகளை வைததுக் கொண்டு நிர்வாகத்தைச் செம்மையாக நடதத முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இராமநாத புரம் மாவட்டத்தை பிரித்துவிட வேண்டும் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்ட பிறகும் அதற்குத் தலைநகரை எங்கே வைப்பது என்பதில்தான் அது தடைப்பட்டிருக்கின்றது. மையஸ் கமிஷன் சிபாரிசின்படி அந்த மாவட்டத்தின் தலைநகர் எப்படி இருக்கவேண்டும் என்று பார்த்தால் சிவ கங்கைதான் என்று நாம் முடிவுக்கு வரவேண்டி இருக்கின்றது. ஆகவே, பொதுமக்க ளுடைய வசதியைக் கருதி சிவகெங்கையைத் தலைநகராகக் கொண்டு அந்த மாவட்டத்தை அமைப்பதற்கு அரசு முன்வருமா !

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர் களே, இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே சொல்லி இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து அதற்கு தலைநகர் எப்படி ஏற்படுத்துவது என்பது பற்றி எல்லாம் அவர்கள் சொன்னதற்குப் பிறகு நான் விளக்க வேண்டிய தில்லை. மேலும், மொத்தமாக சமுதாயத்தினுடைய நலனைக் கருதி காரியங்கள் செய்யப்படுகின்றபோது தங்களுடைய சொந்த நன்மையைக் கருதி அதாவது தங்களுடைய ஊருக்குப் பக்கத்திலே தான் தலைநகர் வரவேண்டும் என்று பெரும்பாலோர் கருதுவ தால்தான் சிக்கல் ஏற்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அரக்கோணம் தாலுக்காவில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இலவசமாக வழங்கப்பட்ட நிலம்.

*வினா எண். 124—திரு. வி. வி. சுவாமிநாதன் மற்றும் திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய செஞ்சிலுவை சங்கத்தினர் (Disaster relief complex) கட்டுவதற்காக அரக்கோணம் தாலுகாவில் இலவச மாக நிலம் கேட்டுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அரசு அவர்களுக்கு இலவசமாக எவ் வளவு நிலம் வழங்கி உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) தலைவரவர்களே, செஞ்சிலுவைச் சங்கத்தினர் துயர் துடைப்புக் கூடம் கட்டுவதற்காக 10 ஏக்கர் நிலம் இலவசமாக அரசு கொடுத்திருக்கின்றது.